# செயலாற்றுகை அறிக்கைகள்

# மற்றும்

# ஆண்டுக் கணக்குகள் 2015

உள்ளடக்கம்

## செயலாற்றுகை அறிக்கை


பக்கம

| | | |
|---|---|---|
| **1.** | **திணைக்களம் மற்றும் அதன் கடமைப் பொறுப்புகள்** | **1** |
| 1.1 | அறிமுகம் | 1 |
| 1.2 | தரிசனம் | 1 |
| 1.3 | நோக்கு | 2 |
| 1.4 | அளவீட்டு விஞ்ஞானம் | 2 |
| 1.4.1 | விஞ்ஞான ரீதியான அளவீட்டு விஞ்ஞானம்(அடிப்படை அளவீட்டு விஞ்ஞானம்) | 2 |
| 1.4.2 | தொழிநுட்ப அளவீட்டு விஞ்ஞானம் (பிரயோக அளவீட்டு விஞ்ஞானம்) | 3 |
| 1.4.3 | சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானம் | 3 |
| 1.5 | அலுவலர்கள் | 5 |
| 1.5.1 | அலுவலர்களின் உள்ளடக்கம் | 5 |
| 1.5.2 | அலுவலகக் குழுவினரை புதுப்பித்தல் | 7 |
| **2.** | **திணைக்களத்தினால் வழங்கும் சேவைகள்** | **8** |
| 2.1 | மாதிரி அனுமதி | 8 |
| 2.2 | தொழிநுட்ப இலக்க மாற்றம் | 8 |
| 2.3 | செயற்பாட்டிலுள்ள தரங்களை மீண்டும் உறுதிப்பபடுத்தல் | 8 |
| 2.4 | மாவட்ட அடிப்படையிலான அளவை மற்றும் நிறுத்தல் உபகரண சரிபார்த்தல் பரிசோதனை மற்றும் சுற்றிவளைப்புகள் | 9 |
| 2.5 | முன்பொதியிடப்பட்ட பொருட்கள் பரிசோதித்தல் | 9 |
| 2.6 | சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானத்தினால் நிர்வகிக்கப்படும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடும் தொழில் முனைவோரைப் பதிவு செய்தல் | 10 |
| 2.7 | இலங்கையின் நியம நேரத்தினை உருவாக்குதல் மற்றும் வெளியிடுதல் | 10 |
| 2.8 | சுகாதாத் துறையில் பயன்படும் அளவீட்டு உபகரணங்களின் இலக்க மாற்றம் மற்றும் சரிபார்த்தல் | 11 |
| **3.** | **சர்வதேச தொடர்புகள், பயிற்சி மற்றும் மாநாடுகள்** | **11** |
| 3.1 | வெளிநாட்டு உயர் கல்வி வாய்ப்புகள் | 12 |
| **4.** | **உள்நாட்டு பயிற்சி செயற்றிட்டங்கள்** | **13** |
| 4.1 | திணைக்களத்தினால் நடாத்தப்படும் பயிற்சி திட்டங்கள் | 13 |
| 4.2 | உள்நாட்டு பயிற்சித்திட்டங்களுக்கு அலுவலர்களை அனுப்புதல் | 14 |

**5.** **பௌதீக அபிவிருத்தி** **14**

5.1 பௌதீக வள அபிவிருத்தி 14

5.1.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவீட்டு உபகரணக் கொள்வனவு 14

5.1.2 மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் 2015 - 16

5.2 தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அளவீட்டு அலகுகள் தரங்கள் சேவைகள் திணைக்களத்தின் தலைமையகத்தினை நிர்மாணித்தல் 17

5.2.1 தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையம் 17

5.2.2 தற்போதைய நிர்மாணித்தல் அமைப்பு 18

5.2.3 புதிய வளாகத்திற்குச் செல்லுதல் 19

5.3 எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள திட்டங்கள் 22

5.3.1 வாடகை வாகன மானிகள் மாதிரி அனுமதி மற்றும் உறுதிப்படுத்தல் 22

5.3.2 மத்திய வாயு சமநிலைப்படுத்தல் தொகுதி நிறுவுதல் 23

**6.** **தேசிய அளவீட்டு ஆய்வு கூடம்** **24**

6.1 ஒவ்வொரு ஆய்வுகூடத்தினால் வழங்கப்படும் இலக்கமாற்றம் பற்றிய தரவுகள் 24

6.2 தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தின் இலக்கமாற்ற வருமானம் பற்றிய தகவல்கள்- 2015ம் ஆண்டு 27

6.3 நிறுத்தல் மற்றும் அளவை உபகரண மாதிரி அனுமதி 2015ம் ஆண்டு 28

6.4 தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தின் வருமான சாராம்சம் 2015ம் ஆண்டு 28

வெளிநாட்டு பயிற்சி மற்றும் மாநாடுகள் -2015 29

உள்நாட்டுப் பயிற்சிகள் - 2015 31

சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞான முறையினால் நிர்வகிக்கப்படும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடும் தனியார் தொழில் முனைவோரின் பரம்பல் 34

சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானத்தினால் நிர்வகிக்கப்படும் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடும் தனியார் தொழில் முனைவோரைப் பதிவு செய்தல் சரிபார்த்தல் செயற்றிட்டம் -2015 வருமானம் 35

உறுதிப்படுத்தல் செயற்றிட்டம் 2015 வருமானம் 35

திடீர் சுற்றிவளைப்பு செயற்றிட்டம் -2015 முன்னேற்றம் 36

சரிபார்த்தல் வருமானம் மாவட்ட ரீதியான வெளிப்பாடு 37

சரிபார்த்தல் செயற்றிட்டம் 2015 அலகுகளின் தொகை மாவட்ட ரீதியாக 38

வரைபு 1 – சரிபாத்தல் வருமானம் 39

வரைபு 2 – சரிபார்க்கப்பட்ட அலகுகளின் தொகை 39

வரைபு 3 – சுற்றிவளைப்பு முன்னேற்றம் 40

வரைபு 4 – வழக்குத் தொடுத்தல் 40

அறிவூட்டல் செயற்றிட்டம் 2015 முன்னேற்றம் 41

அறிவூட்டல் செயற்றிட்டம் முன்னேற்றம் காலாண்டுகளில் -2015 42

நிறுவை உபகரண மாதிரி அனுமதி -2015ம்ஆண்டு (இணைப்பு 1) 44

எரிபொருள் நிரப்பும் இயந்திரம் மாதிரி அனுமதி – 2015 (இணைப்பு 2) 51

## வருடாந்த கணக்குகள்

மீண்டுவரும் செலவு 52

மூலதனச் செலவு 52

செலவு சாராம்சம் 53

நிதிமூலங்கள் 53

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவை திணைக்களத்தின் 2015.12.31ம் திகதிக்குறிய வருமானம் 54

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவை நிதியத்தின் 2015.12.31ம் திகதிக்குறிய செலவு விபரம் 55

# அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

# 2015 ம் ஆண்டிற்கான செயற்றிறன் அறிக்கை மற்றும் நிதி அறிக்கை

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் அடிப்படைக் கொள்கை, செயற்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் 2015ம் ஆண்டில் அடைந்துள்ள அபிவிருத்தி தொடர்பாக தெளிவுபடுத்துவதே இவ்வறிக்கையின் நோக்கமாகும்

## 1. திணைக்களம் மற்றும் அதன் கடமைகள்

### 1.1 அறிமுகம்

1995 இலக்கம் 35 கொண்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் ஒழுங்குகளுக்கமைய திணைக்களம் மற்றும் தேசிய அளவீட்டு பரிசீலனை நிலையம் தாபிக்கப்பட்டது. இத்திணைக்களம் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் அமைந்துள்ளது. இச்சட்டத்தின் ஒழுங்குமுறைகளை செயற்படுத்தி சரியான அளவீட்டு முறைகள் மற்றும் அளவீட்டு விஞ்ஞான சேவைகளை வழங்குதல், உரிய சட்ட வரையரைகளை வகுத்து நுகர்வோரைப் பாதுகாத்தல், தேசிய அளவீட்டு நியமங்களை நடாத்திச் செல்லுதல் சர்வதேச ரீதியாக நடைமுறைப்படுத்தல் போன்றவை திணைக்களத்தின் பொறுப்புகள் ஆகும்.

ஒவ்வொரு நாட்டிலும் தேசிய அளவீட்டு தொகுதியொன்று குறிப்பிடப்பட்டு அவற்றை தேசிய அளவீட்டுத் தரங்களாக நிறுவும் பொறுப்பினை உடைய நிறுவனம் ஒன்று உள்ளது. அவை பொதுவாக அந்தந்த நாட்டின் தேசிய அளவீட்டு நிறுவனம் (National Measurement Institute) என அடையாளம் காணப்படும். இலங்கையில் அத்தகைய பொறுப்பினை வகிப்பது அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் ஆகும். திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய அளவீட்டுப் பரிசீலனை நிலையத்தினால் இலங்கையில் பயன்படுத்தப்படும் அளவீடுகள் தொடர்பான தேசிய தரங்கள் கண்டறியப்பட்டு அவை வரைவிலக்கணம் செய்யப்பட்டு தொடர்ச்சியாக பயன்படுத்தல் நடைபெறுகின்றது.மேலும் கைத்தொழில், பொறியியல், சுற்றாடல், சுகாதாரக் காப்புறுதி பொது வீதிப் பாதுகாப்பு போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் அளவீட்டு உபகரணங்களை அளவீடு செய்தல் மற்றும் சரிபார்த்தல் போன்றவையும் பரிசீலனை நிலையத்தினால் மேற்கொள்ளப்படும்

சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞான நடைமுறைகளின் பொருட்டு அளவீட்டு விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச அமைப்பின் (OIML[1]) விதந்துரைப்புகள் பயன்படுத்தப்படுவதோடு அதனூடாக மின் மற்றும் இயந்திர நிறுவை அளவீட்டுத் தொகுதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது

### 1.2 தரிசனம்

முறையாக பாதுகாக்கப்பட்ட நுகர்வோருக்காக பிழையற்ற மற்றும் நம்பிக்கையான அளவீடுகள்

### 1.3 பணிகள்

அளவீடுகளை அடிப்படையாகக் கொண்ட சேவைகள் மற்றும் முன்னோடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டு உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், அளவீட்டு விஞ்ஞான அல்லது வேறு சேவை

[1]International Organization of Legal Metrology

வழங்குநர்கள் மற்றும் நுகர்வோர்களின் சமநிலையினையும் நீதியினையும் உறுதிப்படுத்தும், சர்வதேச தரங்களுக்கமைவான தேசிய தரங்களை நிறுவுதல், நடாத்திச் செல்லுதல் மற்றும் அவற்றை பிரசாரம் செய்தல் மூலம் இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தினையும் குணநலன்களையும் மேலோங்கச் செய்து அதனூடாக இலங்கையினை ஆசியாவின் ஆச்சரியமாக்கும் தேசிய நோக்கிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்

## 1.4 அளவீட்டு விஞ்ஞானம்

அளவீடுகள் தொடர்பாக கற்கும் விடயம் அளவீட்டு விஞ்ஞானம் என அறியப்படுகின்றது. பெருந்தொகை, நீளம், காலம், பரிமாணம், மின் ஓட்டம், மின் தாக்கம் போன்ற பல்வேறு வகைகளுக்கான அளவீடுகள் அன்றாட வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமக்கு அவசியமாகின்றது. தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையில் பௌதிக அளவுகள் மற்றும் அளவீட்டு அலகுகளின் நியமத்தினை நடைமுறைபடுத்திச் செல்வதன் பொருட்டு மேற்கொள்ளப்படும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மற்றும் முன்னோடி செயற்பாடுகள் அளவீட்டு விஞ்ஞானம் என குறிப்பிடலாம்

அளவீட்டு விஞ்ஞானத்தினை பிரதானமாக மூன்று துறைகளாகப் பிரிக்கலாம்.

1. விஞ்ஞான ரீதியான அளவீட்டு விஞ்ஞானம் (அடிப்படை அளவீட்டு விஞ்ஞானம்)
2. தொழிநுட்ப அளவீட்டு விஞ்ஞானம் (நடைமுறையிலுள்ள அளவீட்டு விஞ்ஞானம்)
3. சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞானம்

இத்துறைகளின் ஊடாக தொழிற்றுறை அளவீட்டு விஞ்ஞானம் மற்றும் சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானத்திற்கான அடித்தளம் உருவாக்கப்படுவது விஞ்ஞான ரீதியான அளவீட்டு விஞ்ஞானத்திற்கு ஆகும்.

### 1.4.1 விஞ்ஞான ரீதியான அளவீட்டு விஞ்ஞானம் (அடிப்படை அளவீட்டு விஞ்ஞானம்)

அளவீட்டு விஞ்ஞானத்தின் முக்கியமான துறை இதுவாகும். விஞ்ஞான ரீதியான அளவீட்டு விஞ்ஞானம் என்பது அளவீட்டு அலகுகள், அலகுத் தொகுதி மற்றும் பெரும் தொகுதிகளை நிறுவுதல், புதிய அளவீட்டு முறைகளை கண்டறிதல், அளவீட்டு தரங்களை அறிந்து கொள்ளல் மற்றும் அத்தரங்களின் நியமத்தினை நடாத்திச் செல்வதன் மூலம் அவற்றை பயன்படுத்துவோரிடையே வியாப்தியடையச் செய்தல் தொடர்பான விடயப் பரப்பாகும். மேலும் அளவீட்டுப் பிழைகளை அறிந்து கொள்ளல் மற்றும் அவற்றைத் தீர்த்து வைத்தல் போன்றவற்றில் தாக்கம் செலுத்தும் விடயங்கள் மற்றும் நடைமுறை விடயங்களும் விஞ்ஞான ரீதியான அளவீட்டு விஞ்ஞானத் துறையில உள்ளடக்கப்படும்.

விஞ்ஞான ரீதியான அளவீட்டு விஞ்ஞானத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பின்பற்றும் படிமுறைகள் சில வருமாறு

1. தேசிய அளவீட்டு பரிசோதனை நிலையத்தினை தாபித்து அதனூடாக தேசிய அளவீட்டு அலகுத் தொகுதியினை உருவாக்குதல்
2. தேசிய அளவீட்டுத் தரங்களை அர்த்தம் கற்பித்தல், உருவாக்குதல், தற்காலப்படுத்தல் நடாத்திச் செல்லுதல் மற்றும் வியாப்தியடையச் செய்தல்
3. சர்வதேச அளவீட்டுத் தரங்களின் பயன்பாட்டுக்கு அமைவாக தேசிய அளவீட்டுத் தொகுதியினை நிறுவுதல் மற்றும் நடாத்திச் செல்லுதல்

4. பல்வேறு துறைகளுக்கும் தேவையான அளவீட்டுத் தரங்கள் மற்றும் தொழிநுட்பத்தினை பரம்பலடையச் செய்தல் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள்.
5. தேசிய அளவீட்டு தொகுதியினை நிலையாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான எண்முறைமை மற்றும் ஆய்வுகூட தரப்படுத்தல் நடவடிக்கைகள்
6. அளவீட்டுத் தொழிநுட்ப விஞ்ஞானம் தொடர்பான பயிற்சி வழங்கல், ஆலோசனை சேவைகள் வழங்குதல் மற்றும் அளவீடுகள் தொடர்பான சிக்கல்களை தீர்த்து வைக்கும் முறைகள் பற்றிய அறிவுரை வழங்குதல்
7. அளவீட்டு விஞ்ஞான ஆராய்ச்சி நடவடிக்கைகள்
8. இலங்கையின் நியம நேரத்தினை உருவாக்குதல் மற்றும் www.sltime.org வலைத்தளத்தின் ஊடாக ஒளிபரப்பு செய்தல்

### 1.4.2 தொழிற்றுறை அளவீட்டு விஞ்ஞானம் (நடைமுறையிலுள்ள அளவீட்டு விஞ்ஞானம்)

நடைமுறையிலுள்ள அளவீட்டு விஞ்ஞானம் எனவும் குறிப்பிடப்படும் இவ்விடயப் பிரிவு அளவீட்டு விஞ்ஞானத்தினை கைத்தொழில் மற்றும் உற்பத்தி செயற்பாடுகளில் பயன்படுத்தும் முறை தொடர்பானதாக அமைகிறது. அளவீட்டு உபகரணப் பயன்பாட்டின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்தி அவற்றை கைத்தொழில் துறைகளில் ஈடுபடுத்தல், அளவீடுகளில் தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் தொழிநுட்ப அளவீட்டு விஞ்ஞானத்திற்கு உரியவையாகும். அதன் போது தேவைக்கேற்ற சந்தர்ப்பத்தில் நிலவுகின்றமையை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கைத்தொழில் இலக்கமாற்ற நடவடிக்கைகள், அளவீட்டு செயல்முறையின் நிர்வாகம் மற்றும் அளவீட்டு உபகரண முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொழில்நுட்ப அளவீட்டு விஞ்ஞானத் துறையில் மேற்கொள்ளப்படும் நடவக்கைகள் வருமாறு

1. கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் அளவுகள் மற்றும் அளவீட்டு உபகரண இலக்க மாற்றம் (ஆய்வுகூடத்தில் மற்றும் வெளிவாரி இலக்கமாற்றம் உள்ளிட்ட)
2. உற்பத்தி மற்றும் சேவைத்துறை கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் பாரிய அளவிலான அளவீட்டு உபகரணத் தொகுதிகள் பரிசோதித்தல் மற்றும் உறுதிப்படுத்தல்
3. கைத்தொழில் அளவீட்டு எண்முறைமை, உபகரண நிர்வாகம் மற்றும் அளவீட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்

### 1.4.3 சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞானம்

சட்டரீதியான நிர்வாகத்தின் கீழமையும் துறைகள் சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞானம் ஆகும். அதாவது அளவீடு மற்றும் அளவீட்டு உபகரணப் பயன்பாட்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய சட்டரீதியான தேவைகளை பரிசீலித்து நாட்டில் உள்ள அளவீட்டுச் சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் உள்ளதென உறுதிப்படுத்தும் நடவடிக்கை ஆகும். அதன் பொருட்டு 1995ம் ஆண்டு இலக்கம் 35 உடைய சட்டத்தின் மூலம் உரிய சட்டமுறைகள்

உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கமைய சுகாதாரம், மக்கள் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, வரிமுறைமை, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பொதுவான வர்த்தகம் போன்ற பிரிவுகளை கருத்திற் கொண்டு அமுலாக்கப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளை பேணுதல்

சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞான விடயத்துடன் தொடர்புடைய அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கான சட்ட ஒழுங்குகள் மற்றும் அதனுள்ளடக்கப்பட்டுள்ள ஆணைகளின் கீழ் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள திணைக்களத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

1. பயன்பாட்டில் உள்ள தரங்களை ஒப்பீடு செய்தல் மற்றும் மாவட்ட அடிப்படையில் செயற்பாட்டிலுள்ள தரங்களை கொண்டு நடாத்துதல். (சட்டத்திற்கு அமைய அனைத்து மாவட்ட செயலாளர்களும் அளவீட்டு சேவை அதிகாரி பதவிக்குறிய பொறுப்புகளையும் ஏற்க வேண்டும் என்பதோடு செயற்பாட்டிலுள்ள தரங்கள் அவரது பொறுப்பில் காணப்படும்)

2. வர்த்தகத்தின் போது பயன்படுத்தப்படும் அனைத்து படிகள் மற்றும் அளவுகள், அளவீட்டு உபகரணங்களின் அடிப்படை மற்றும் வருடாந்த உறுதிப்படுத்தல்கள

3. வர்த்தகத்திற்காக பயன்படுத்தப்படும் நிறுவை மற்றும் அளவை உபகரணங்களை உற்பத்தி செய்வோர், பழுது பார்ப்போர் மற்றும் விற்பனை செய்பவர்களை வருடாந்தம் பதிவு செய்தல்.

4. சட்டமூலத்தில் காணப்படும் தண்டணை முறைகளை செயற்படுத்துவதன் ஊடாக நுகர்வோரைப் பாதுகாத்தல்

5. சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞானம் தொடர்பாக நுகர்வோரை தெளிவுபடுத்தல்

6. வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறையில் பயன்படுத்தப்படும் நிறுவை மற்றும் அளவை உபகரணங்களின் மாதிரிகளுக்கு அனுமதி வழங்குதல்

7. முன்பொதியிடல்களை பரிசீலித்தல் மற்றும் கட்டுப்படுத்தல்

8. வீதிப்பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறைகள் தொடர்பான அளவீட்டு உபகரணங்களுக்கு கட்டாய எண்முறைமை நடவடிக்கைகள்

9. வர்த்தக நிறுவனங்களை சுற்றிவளைப்பதன் ஊடாக அளவை, நிறுவை ஊழல்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல்

## 1.5 அலுவலகக் குழுவினர்

### 1.5.1 அலுவலர்கள் உள்ளடக்கம் 2015 (அட்டவணை 1)

| பதவி | சம்பளத் தொகுதி | சேவைப் பிரிவு | தரம் | அனுமதிக்கப் பட்ட பதவிகள் | தற்போதைய ஊழியர் தொகை | | | நிலவும் பதவி வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிரந்தர | அமைய | பதில் | |
| அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவை பணிப்பாளர் | SL-1-2006 | இலங்கை விஞ்ஞான சேவை | I | 01 | - | - | 01 | 01 |
| அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவை பிரதிப் பணிப்பாளர் ∴ உதவிப் பணிப்பாளர் | SL-1-2006 | இலங்கை விஞ்ஞான சேவை | III/II/I | 11 | 10 | - | - | 01 |
| உதவிப்பணிப்பாளர் நிர்வாகம் | SL-1-2006 | இலங்கை நிர்வாக சேவை | III | 01 | 01 | - | - | - |
| உதவிப்பணிப்பாளர் (திணைக்களம்) | SL-1-2006 | திணைக்களத்திற்குள்ளான | | 01 | - | - | - | 01 |
| கணக்காளர் | SL-1-2006 | இலங்கை கணக்காளர் சேவை | II/I , II/II | 01 | - | - | - | 01 |
| கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு) | SL-1-2006 | இலங்கை கணக்காளர் சேவை | II/I, II/II | 01 | - | - | - | 01 |
| நிர்வாக உத்தியோகத்தர் | MN-7-2006 | முகாமைத்துவ உதவியாளர் சேவை | அதி தரம் | 01 | - | - | 01 | 01 |
| உதவி அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவை | MN-7-2006 | திணைக்களத்திற்குள்ளான | | 04 | - | - | 02 | 04 |
| அளவீட்டு சேவை முறைப் பரிசோதகர் | MN-7-2006 | இலங்கை தொழிநுட்பசேவை சேவை (விசேட) | | 25 | - | - | - | 25 |
| அளவீட்டு விஞ்ஞான ஆராய்ச்சி அதிகாரி | MN-4-2006 | திணைக்களத்திற்குள்ளான | | 18 | 04 | - | - | 14 |
| மாவட்ட அளவீட்டு விஞ்ஞான ஆய்வ உதவியாளர் | MN-4-2006 | திணைக்களத்திற்குள்ளான | | 03 | 03 | - | - | - |

| பதவி | சம்பளத் தொகுதி | சேவைப் பிரிவு | தரம் | அனுமதிக்கப் பட்ட பதவிகள | தற்போதைய ஊழியர் தொகை | | | நிலவும் பதவி வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நிரந்தர | அமைய | பதில் | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அலுவலர் | MN-6-2006 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவை | | 01 | 01 | - | - | - |
| அபிவிருத்தி உதவியாளர | MN-4-2006 | அபிவிருத்தி உதவியாளர் சேவை | | 60 | 30 | - | - | 30 |
| நூலகர் | MN-3-2006 | இலங்கை அரச நூலகர் சேவை | | 01 | - | - | - | 01 |
| அளவீட்டு சேவை முறைப் பரிசோதகர் | MN-3-2006 | இலங்கை தொழிநுட்ப சேவை | III/II/I | 91 | 58 | 08 | - | 33 |
| ஆய்வு கூட உதவியாளர் | MN-3-2006 | திணைக்களத்தினுள் | | 04 | - | - | - | 04 |
| முகாமைத்துவ உதவியாளர் | MN-2-2006 | அரச முகாமைத்துவ சேவை | | 20 | 15 | - | - | 05 |
| தொழிநுட்ப கலைஞர் | MT3/PL3 | திணைக்களத்தினுள் | | 02 | - | - | - | 02 |
| இயந்திரத் தொழிநுட்பவியலாளர் | PL3-2006 | திணைக்களத்தினுள் | | 02 | 02 | - | - | - |
| சாரதி | PL3-2006 | திணைக்களத்தினுள் | | 10 | 09 | - | - | 01 |
| அளவீட்டு தரச் சேவை உதவியாளர் | PL2-2006 | திணைக்களத்தினுள் | | 63 | 47 | - | - | 16 |
| ஆய்வுகூட உதவியாளர் | PL2-2006 | திணைக்களத்தினுள் | | 10 | 03 | - | - | 07 |
| லொறி உதவியாளர் | PL1-2006 | திணைக்களத்தினுள் | | 02 | 02 | - | - | - |
| அலுவலக உதவியாளர் | PL1-2006 | அலுவலக உதவியாளர் சேவை | | 05 | 05 | - | - | - |
| காவலாளி | PL1-2006 | திணைக்களத்தினுள் | | 01 | - | - | - | 01 |
| துப்புரவுத் தொழிலாளர் | PL1-2006 | திணைக்களத்தினுள் | | 01 | 01 | - | - | - |

**1.5.2 புதுப்பிக்கப்பட்ட அலுவலகக் குழுவினர் தரவுகள் 2015ம ஆண்டு** (அட்டவணை 2)

| பதவி | புதிய இணைத்தல்கள் | ஓய்வுபெறல் | இடமாற்றம் பெற்று வருதல் | இடமாற்றம் பெற்றுச் செல்லல் | பதவியுயர்வு | விலகிச் செல்லல் | சேவை விட்டு விலகல் | மரணித்தல் | இலங்கை தொழிநுட்ப சேவை (பயிற்சி) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உதவிப்பணிப்பாளர் (நிர்வாகம்) | 01 | - | - | 01 | - | - | - | - | - |
| உதவிப்பணிப்பாளர் (திணைக்களம்) | - | 01 | - | - | - | - | - | - | - |
| அளவீட்டு சேவை உபாயமுறை பரிசோதகர் (விசேட) | - | 01 | - | - | 01 | - | - | - | - |
| அளிவிருத்தி உதவியாளர் | - | - | - | 02 | - | 01 | - | - | - |
| அளவீட்டு சேவை உபாயமுறை பரிசோதகர் | - | 02 | - | - | - | - | - | - | 20 |
| ஆய்வு கூட உதவியாளர் | - | - | - | - | - | - | - | - | 03 |
| முகாமைத்துவ உதவியாளர் | 02 | - | - | - | - | - | - | - | - |
| தொழிநுட்ப கலைஞர் | - | - | - | - | - | - | - | 01 | - |
| சாரதி | - | - | 01 | 01 | - | - | - | - | - |
| அளவீட்டு நியமங்கள் சேவை உதவியாளர் | 06 | 03 | - | - | - | - | 01 | - | - |
| ஆய்வு கூட உதவியாளர் | 03 | - | - | - | - | - | - | - | - |
| அலுவலக உதவியாளர் | - | - | 02 | - | - | - | - | - | - |

## 2. திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவை

### 2.1 மாதிரி அனுமதி

மாதிரி அனுமதி என்பது ஏதேனும் ஒரு படி அளவீட்டு உபகரணம் ஒன்று உற்பத்தியாளரால் சந்தைக்கு அனுப்புவதற்கு அல்லது இறக்குமதி செய்பவரால் வியாபாரி ஒருவருக்கு விற்பனை செய்ய முன் அது இலங்கையில் பயன்பாட்டில் இருக்கும் அளவீடு பற்றிய சட்டதிட்டங்களுக்கு அமைவானதா என தகைமையுடைய ஆய்வகம் ஒன்றில் பரிசீலித்து அனுமதி வழங்குதல் ஆகும். அதன்போது அளவீட்டு உபகரணத்தின் அடிப்படை மாதிரி தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையத்தில் முழுமையாகப் பரிசீலிக்கப்படும். மேலும் அளவீட்டு உபகரணத்தின் ஒவ்வொரு பாகமும் உருவாக்கப்பட்டுள்ள முறை சர்வதேச சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞான அமைப்பின் (International Organization of Legal Metrology) நியமங்களுக்கு அமைவாக உள்ளதா என ஆராயப்படும். அதன்படி அனைத்து நிறுவை அல்லது அளவை உபகரணங்களுக்கும் (வாகனப் புகை மானிகள் மற்றும் எரிபொருள் வழங்கும் இயந்திரம் உட்பட) மாதிரி அனுமதி வழங்குதல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. (இணைப்பு 1,2)

### 2.2 தொழிற்றுறை அளவீட்டு சரிபார்த்தல்

தொழிற்சாலை, பொறியியல் அல்லது வேறு ஏதேனும் துறைகளில் பயன்படுத்தப்படும் அழுத்த மானிகள் வெப்பமானிகள், நிறைப் படிகள் , தராசுகள், நீளம் அளவிடும் உபகரணங்கள், மின் அளவீட்டு உபகரணங்கள், ஈரப்பதன் அளவிடும் உபகரணங்கள், ஆய்வுகூட நிறுவை தராசுகள் போன்றவற்றை அளவிடும் வசதிகள் தற்போது எமது திணைக்களத்தில் காணப்படுகின்றது. மேலும் அதன் பொருட்டு அத்தாட்சிப் பத்திரங்களும் வழங்கப்பட்டு வருகின்றது. அதுமட்டுமன்றி வாகனங்களின் வேகத்தினை அளவிடப் பயன்படும் உபகரணங்கள் சரிபார்த்தல் மற்றும் வாகனங்களில் இருந்து புகை பரிசோதனை செய்வதற்குப் பயன்படும் உபகரணங்களை சரிபார்த்தல் போன்ற நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அட்டவணை 8) அனைத்து இலக்க சரிபார்த்தல்களுக்குமான மாற்றப்பட்ட கொடுப்பனவுகள் 2015.07.02ம் திகதியுடைய 1921/54 அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது

### 2.3 செயற்பாட்டிலுள்ள தரங்களை மீண்டும் சரிபார்த்தல்

வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் நிறுவை மற்றும் அளவை உபகரணங்களை சரிபார்த்தலின் பொருட்டு பயன்படுத்தப்படும் செயற்பாட்டுத் தரங்கள் அனைத்து மாவட்ட செயலகங்களிலும் மாவட்ட செயலாளர்களின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தரங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை சரிபார்த்தல் மேற்கொள்ளப்படும். குறித்த இலக்க சரிபார்த்தல் நடவடிக்கைகள் தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்படும். நியம அடிப்படையான படிகள், தொகுதி அளவீடுகள் மற்றும் நீள அளவீடுகள் இத்தகைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களாகக் கருதப்படுகின்றன.

## 2.4 மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்படும் நிறுவை மற்றும் அளவை உபகரணங்களை சரிபார்த்தல், பரிசோதித்தல் மற்றும் சுற்றிவளைப்புகள்

நாட்டினுள் பயன்படுத்தப்படும் நிறுவை மற்றும் அளவை உபகரணங்கள் அளவீட்டு சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதா என பரிசோதிப்பதன் பொருட்டு பரிசோதனை மற்றும் சுற்றிவளைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வேளைத்திட்டங்கள் நுகர்வோரின் பாதுகாப்பிற்கும் நாட்டினுள் சரியான அளவீட்டு தொகுதிகளை நடாத்திச் செல்வதற்கும் உதவியாக அமைகின்றது.

வர்த்தகத்தின் போது பயன்படுத்தப்படும் நிறுவை மற்றும் அளவீட்டு உபகரணங்களின் இலக்க மாற்றமானது மாவட்ட செயலகங்களில் உள்ள அளவீட்டு சேவை செயல்முறைப் பரிசோதகர்களினால் (Measurement Services and Devices Inspectors) மேற்கொள்ளப்படுகின்றது. பிரதேச செயலகங்கள் அல்லது ஏனைய அரச நிறுவனங்களில் உறுதிப்படுத்தல் மத்திய நிலையங்களை நிறுவி மாவட்ட செயலாளரின் அனுமதியுடன் வருடத்திற்கு ஒரு தடவை கட்டாயமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பாலத்தராசுகள் ஒவ்வொரு வருடமும் முத்திரையிட்டு அடைப்பதன் பொருட்டு நடமாடும் பாலத் தராசு தொகுதி நிறுவப்பட்டுள்ளது. நாடுமுழுவதும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் காணப்படும் எரிபொருள் விநியோக இயந்திரங்கள் வருடத்திற்கு ஒரு தடவை முத்திரையிட்டு அடைக்கப்படும். அதன் பொருட்டு எரிபொருள் விநியோக இயந்திரங்களை முத்திரையிட்டு அடைக்கும் நடமாடும் தொகுதி (Fuel Dispensers Verification Unit) நிறுவப்பட்டுள்ளது (அட்டவனை 15,16,17 மற்றும் 18)

## 2.5 முன் பொதியிடப்பட்ட பொருட்களை பரிசீலித்தல்

நுகர்வோருக்கு விற்பனை செய்ய முன்பே பொதியிடப்பட்ட பொருட்கள் முன் பொதியிடப்பட்ட பொருட்கள் என குறிப்பிடப்படும். முன் பொதியிடப்பட்ட பொருட்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகள் (நிறை, கனவளவு போன்றவை) உரிய முறையில் உள்ளதா என பரிசீலிக்கும்போது சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானம் தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்களுக்கு (OIML regulations) அமைவாக உள்ளனவா என பரிசீலிக்கப்படும்.

முன் பொதியிடப்பட்ட பொருட்களை பரிசீலிக்கும் போது சந்தையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள முன்பொதியிட்ட பொருட்களை மாதிரியாகத் தெரிவு செய்து அவற்றில் அடங்கியுள்ள நிகர எடை கனவளவு அல்லது நீளம் அளவிடப்படும். குறித்தளவு முன்பொதியிட்ட பொருட்களை அவ்வாறு பரிசீலித்து அவை அளவீட்டு சரிபார்த்தல் பகுப்பாய்வுக்கு (statistical analysis) உட்படுத்தப்படும் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக முன் பொதியிடப்பட்ட நிகர அளவீடுகளில் ஏற்படக்கூடிய பிழைகளுடன் பரிசீலித்துப் பார்த்து குறித்த முன்பொதியிடல் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும். முன்பொதியிடல்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் 2017.05.29ம் திகதியுடைய இல 14299∴7 உடைய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## 2.6 சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞான செயற்பாடுகளில் ஈடுபடும் தனியார் தொழில் முனைவோர்களைப் பதிவு செய்தல்

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 21 வது பிரிவின் படி நிறுவை மற்றும் அளவை உபகரங்களை விற்பனை செய்தல், உற்பத்தி செய்தல் அல்லது பழுதுபார்த்தல் போன்றவற்றில் ஈடுபடும் ஏதேனுமொரு அமைப்பு, நிறுவனம் அல்லது நபர் ஒருவர் திணைக்களத்தில் பதிவு செய்தல் வேண்டும். அதன் பொருட்டு அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரால் குறிப்பிடப்படும் மாதிரிப் படிவத்தின் மூலமாக விண்ணப்பித்து அதற்கான உரிய கட்டணத்தினையும் செலுத்த வேண்டும். இவ்வாறு பதிவு செய்தலின் போது வழங்கப்படும் உறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்ட வருடத்தின் டிசம்பர் மாதம் 31ம் திகதி இரத்துச் செய்யப்படும். ஏதேனும் நபரொருவர் நிறுவை அல்லது அளவீட்டு உபகரணங்களை பழுதுபார்க்கும் வியாபாரம் ஒன்றினை ஆரம்பிக்க முன்னர் தமக்கு அத்தகைய கடமையில் ஈடுபடுவதற்கு உள்ள தகைமைகள் மற்றும் திறன்களை பரிசோதிப்பதன் பொருட்டு திணைக்களத்தினால் நடாத்தப்படும் செயல்முறைப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்ற வேண்டும். அப்பரீட்சைக்கு உரிய பரீட்சைக் கட்டணங்களையும் செலுத்த வேண்டும். பரீட்சையில் சித்திபெற்ற அளவீட்டு உபகரணங்களை பழுதுபார்ப்பதற்குத் தேவையான கருவிகளையும் தம் வசம் கொண்டுள்ள நபர்களுக்கு அளவீட்டு உபகரணப் பழுதுபார்ப்பிற்கான உரிமம் வழங்கப்படும் (அட்டவணை 12)

படிகள், அளவீடுகள், நிறுவைகள் அல்லது அளவீட்டு உபரண புதுப்பித்தலுக்குத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் விண்ணப்பதாரியிடம் உள்ளதா என பரிசீலிக்கப்படும். அதன் பொருட்டு திணைக்களத்தின் அலுவலர்களால் குறித்த விண்ணப்பதாரியின் வேலைத்தளம் / தொழிற்சாலை பரிசோதனை செய்யப்படும்.

அத்தகைய இடப் பரிசோதனையின் பின்னர் அனைத்து பரிசீலனைகள் தொடர்பாக பணிப்பாளரின் திருப்தியின் அடிப்படையில் உரிய நபருக்கு பழுதுபார்ப்பதற்கான உறுதிப்பத்திரம் வழங்கப்படும்.(அட்டவணை 13இ14) அச்சான்றிதழை வேறொருவருக்கு வழங்க முடியாது. கைத்தொழிலின் உரிமையாளர் மாறுமிடத்து தகுதியுடைய தொழிநுட்ப அலுவலர் ஒருவர் காணப்பட வேண்டும்.

பதிவுக் கட்டணங்கள் உள்ளிட்ட பதிவு செய்தல் தொடர்பான அனைத்து தகவல்கள் 2015.07.02ம் திகதியுடைய 1921/54 உடைய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## 2.7 இலங்கையின் நியம நேரத்தினை ஒலிபரப்புதல்

இலங்கைக்கு நியம நேரத்தினை வழங்கும் முன்னோடியாக அமையும் கௌரவம் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு உரித்துடையதாகும். நாடு முழுவதும் நேரம் தொடர்பான நியமம் ஒன்றினை ஏற்படுத்தும் தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையத்தில் பொருட்டு மின்னியல் காலம் மற்றும் டிஜிட்டல் ஆய்வுகூடத்தின் விசேட செயற்றிட்டம் ஒன்றாக இலங்கையின் ஏற்றுக் கொள்ளப்படட்ட நேரத்தினை உருவாக்கி ஒளிபரப்புச் செய்தல் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக ருபீடியம் அணுக்கடிகாரம் ஒன்று நிறுவப்பட்டு அதனூடாக சர்வதேச நேர இணக்கபாட்டுக்கு அமைவாக இலங்கையின் சரியான நேரம் கணிப்பிடப்பட்டு வெளியிடப்படுகின்றது. சரியான நேரத்தினை ஒளிபரப்புவதன் பொருட்டு 2011ம் ஆண்டு ஏப்ரல் மாதம் www.sltime.org வலைத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. நாளின்

எந்தவொரு நேரத்திலும் இந்த வலைத்தளத்தினை அடைந்து இலங்கையின் சரியான நேரத்தை அறிந்துகொள்ளும் வசதிகள் தற்போது அனைவருக்கும் கிடைக்கப்பெற்றுள்ளது. இவ்வலைத்தளத்தின் ஊடாக தாம் பயன்படுத்தும் கடிகாரத்தில் சரியாக ஒழுங்கமைத்துக் கொள்ளும்படி திணைக்களத்தின் அனைத்து பிரிவினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ள இச்சேவை உலகில் தற்போது மிகச்சரியான நேரத்தினை உருவாக்கக் கூடிய சீசியம் அணுக்கடிகாரம் வரை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. 2016ம் ஆண்டில் அதன்பொருட்டு தேவையான உபகரணத் தொகுதி தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையத்தினுள் உருவாக்கப்படவுள்ளது

### 2.8 சுகாதாரத் துறையில் பயன்படுத்தப்படும் அளவீட்டு உபகரணங்களை அளவிடுதல்

சுகாதாரத் துறையில் பயன்படுத்தப்படும் நிறுவை உபரணங்கள், வெப்பமானிகள் குருதியமுக்க மானிகள் போன்ற உபகரணங்களை அளவிடுவதன் மூலம் அவற்றின் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்துவதோடு அதனூடாக துல்லியமான மற்றும் நம்பிக்கையான வகையில் நோய்கள் தீர்மானிக்கப்படுகின்றன. வைத்தியசாலைகள் மற்றும் சுகாதாரத் துறைக்குறிய ஏனைய நிறுவனங்களுக்கு அதற்கான வசதிகளை திணைக்களத்தினால் வழங்க முடியும்.

## 3. சர்வதேசத் தொடர்புகள், பயிற்சி மற்றும் மாநாடுகள்

அளவீட்டு விஞ்ஞானத்துடன் தொடர்புடைய சர்வதேச மற்றும் வலய ஒத்துழைப்பினை மேற்கொண்டு செல்வதற்கு பல்வேறு நாடுகளுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாம் பயன்படுத்தும் அளவீடுகளின் சர்வதேச இணக்கப்பாடு மற்றும் நம்பிக்கையினை உறுதிப்படுத்துவதற்கும், வர்த்தகத்தின் போது உருவாகும் தொழிநுட்ப சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதன் பொருட்டும் சர்வதேசத் தொடர்புகள் அவசியமானதாகும். மேலும் தற்போது பயன்படுத்தப்படும் விஞ்ஞானரீதியான மற்றும் ஏனைய அளவீட்டு முறைகளுக்கு அடிப்படை பாதுகாப்பினை வழங்குதல், தொழிநுட்ப முறைகளைக் கண்டு பிடித்தல் மற்றும் அவற்றை வியாப்தியடையச் செய்தல் மூலம் தொழிநுட்ப அறிவினை பரிமாற்றம் செய்தல், பல்வேறு நாடுகளில் ஏற்படும் தொழிநுட்பத் தடைகளை குறைத்துக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்கும் சர்வதேசத் தொடர்புகள் அவசியமாகும்.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் தற்போது கீழ்வரும் சர்வதேச தொடர்புகளை நடத்திச் செல்கின்றது.

1. சர்வதேச சட்டரீதியான அளவீட்டு அமைப்பின் (OIML) அங்கத்துவம் பெறல்
2. ஆசிய பசுபிக் அளவீட்டு விஞ்ஞான செயற்றிட்டத்தில் APMP)[2] (அங்கத்துவம் பெறல்
3. நிறுவை மற்றும் அளவீடு தொடர்பான சர்வதேச குழுவின் CIPM) [3] ( பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில்MRA) [4]( இணை உறுப்புரிமை பெறல்.
4. ஜேர்மன் அளவீட்டு நிறுவனம் மற்றும் சார்க் அமைப்பு (PTB – SAARC) இடையே உள்ள இருதரப்பு தொடர்புகளின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களில் சார்க் வலய நாடாகப் பங்குபற்றுதல்

[2] Asia Pacific Metrology Programme
[3] International Committee for Weights and Measures
[4] Mutual Recognition Arrangement

மேலும் பல்வேறு பௌதீகப் பிரிவுகளுக்குறிய சர்வதேச ஒப்பீட்டு நடவடிக்கைகளிலும் ஒவ்வொரு வருடமும் பங்குபற்றியுள்ளதோடு அதனூடாக வெற்றிகரமான பிரதிபலன்களும் பெறப்பட்டுள்ளது.2015ம் ஆண்டிலும் திணைக்களத்தின் அலுவலர்கள் பல்வேறு வெளிநாட்டுப் பயிற்சி திட்டங்கள் மற்றும் அளவீட்டு விஞ்ஞானத்துடன் தொடர்புடைய வெளிநாட்டு மாநாடுகளில் பங்குபற்றியுள்ளனர். (அட்டவணை 11)

## 3.1 வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புகள்

அளவீட்டு விஞ்ஞானத்துறை தொடர்பான உயர்கல்வி வாய்ப்புகள் சில நாடுகளின் பல்கலைக் கழகங்களில் இடம்பெறுகின்றன. அளவீட்டு விஞ்ஞானம் தொடர்பான முதுகலைப் பட்டக்கல்வி நடவடிக்கைகளை நடாத்தும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் குறிப்பிட்டளவில் உலகம் முழுவதும் காணப்படுகின்றது. அவ்வாறே மேலும் சில நாடுகளில் தேசிய அளவீட்டு நிறுவனங்களுடன் இணைந்தவாறு அளவீட்டு விஞ்ஞான முதுகலைப்பட்டக் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நிறுவனங்கள் காணப்படுகின்றன.

அளவீட்டு விஞ்ஞானத்துடன் தொடர்புடைய வெளிநாட்டு முதுகலைப்பட்டக் கல்வி நடவடிக்கைகளில் பங்குபற்றும் அரிய வாய்ப்பு திணைக்களத்தின் அலுவலர்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதன்படி வெளிநாட்டு முதுகலைப்பட்டக் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மற்றும் 2015ம் ஆண்டில் பயிற்சிநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்த அலுவலர்கள் பற்றிய விபரம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3

| | அலுவலரின் பெயர் | பதவி | பட்டம் | நிறுவனம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு எஸ்.டீ.ஜ.டயஸ் | உதவிப் பணிப்பாளர் | பிரயோக அளவீட்டு விஞ்ஞானம் பற்றிய முதுகலைப் பட்டம் | டாட்டு பல்கலைக்கழகம்-எஸ்டோனியா | 2013.08.24 முதல் 2015.08.22 |
| 2 | திருமதி ஜீ.டப்ளியு.சீ. விஜபசுந்தர | உதவிப் பணிப்பாளர் | அளவீட்டு விஞ்ஞானம் தொடர்பான வித்தியோதயா பட்டம் | விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப பல்கலைக்கழகம் - தென்கொரியா | 2014.02.16 முதல் |

## 4. உள்நாட்டு பயிற்சித் திட்டங்கள்

### 4.1 திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பயிற்சித் திட்டங்கள்

2015ம் ஆண்டு முதல் அளவீட்டு விஞ்ஞானத் துறைக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதன் பொருட்டு விசேட செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இரசாயன அளவீட்டு விஞ்ஞானம் மற்றும் அளவீட்டு நிச்சயமற்ற தன்மைகளை கணக்கிடுதல் (Chemical Metrolory and Uncertainty Calculation) தொடர்பான பயிற்சி வழங்குவதற்குத் தேவையான வளங்கள் திணைக்களத்தில் காணப்படுகின்றது. 2015ம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிநெறிகள் பற்றிய விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

(அட்டவணை 4)

| பாடத்திட்டத்தின் பெயர் | நடத்திய திகதி | பங்குபற்றியோர் தொகை | கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| இரசாயன அளவீட்டு விஞ்ஞானம் பற்றிய அறிமுகம் | 2015.05.20 | 9 | 12500.00 |
| அளவீட்டு நிச்சயமின்மைகளை மதிப்பிடல் | 2015.09.05 | 25 | 9500.00 |
| அளவீட்டு நிச்சயமின்மைகளை மதிப்பிடல் | 2015.11.12 | 22 | 9500.00 |
| அளவீட்டு நிச்சயமின்மைகளை மதிப்பிடல் (மத்திய சுற்றாடல் அதிகார சபையில் நடத்தப்பட்டது) | 2015.09.21 | 19 | 3000.00 |

*ஒருவருக்கான கட்டணம் குறிப்பிடப்பட்டுள்ளது

### 4.2 உள்நாட்டுப் பயிற்சித்திட்டங்களில் அலுலர்களைப் பங்குபற்றச் செய்தல்

நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் அலுவலர்களின் பயிற்சித் தேவைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு திணைக்களம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு அலுவலருக்கும் தாம் செய்யும் சேவை தொடர்பான அறிவு காணப்படுவது மிகவும் அத்தியாவசியமாகும். எனவே தமது அறிவினை மேலும் அதிகரித்துக் கொள்வதன் பொருட்டும் சிறந்த அனுபவமும் தற்காலமயப்படுத்தப்பட்ட அறிவினையும் கொண்டு சேவையில் உயர்வு பெறுவதற்கும் இயலுமானவகையில் அலுவலர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. 2015ம் ஆண்டில் திணைக்களததின் அலுவலர்கள் பங்குபற்றிய உள்நாட்டு பயிற்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் அட்டவணை 05ல் காட்டப்பட்டுள்ளது.

## 5. பௌதீக அபிவிருத்தி

### 5.1. பௌதீக வளங்களை கொள்வனவு செய்தல்

இதன்கீழ் 2015ம் ஆண்டில் பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக அலுவலக தளபாடங்கள், மின் உபகரணங்கள் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்கள் கொள்ளவனவு செய்யப்பட்டுள்ளன.

### 5.1.1 நியம அளவிட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்தல்

தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையத்திற்காக 2015ம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நியம அளவீட்டு உபகரணங்கள் பற்றிய தரவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன (அட்டவணை 5)

(அட்டவணை 5)

| திகதி | உபகரணம் | தொகை | மொத்த செலவீடு ரூபா |
|---|---|---|---|
| 2015.01.20 | சேரா கெலிபர் பரிசோதனை கருவி | 1 | 661,926.00 |
| 2015.02.03 | சேவை கணணி | 3 | 829,950.00 |
| 2015.03.03 | யூ.பீ.எஸ்.24ஏ.∴15யு | 2 | 794,000.00 |
| 2015.03.03 | ஆய்வுகூட அழுத்த பதியும் பருவி | 3 | 1,029,000.00 |
| 2015.03.03 | மு வகை வெப்ப அளவீடுகள் | 10 | 280,000.00 |
| 2015.03.23 | அதி வோல்ட் மானி | 1 | 1,610,000.00 |
| 2015.03.30 | மின்கலமானி | 1 | 1,158,375.00 |
| 2015.05.04 | வாயு விருத்தி குழாய் 700 டியசு | 1 | 3,966,255.00 |
| 2015.05.04 | ப்லுக் அழுத்தமானி | 2 | 807,691.00 |
| 2015.05.04 | 915எம் இணைகுழாய்கள் | 1 | 4,180,105.50 |

5.1.2. மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள்-2015 (அட்டவணை 6)

| மாவட்டம் | வழங்கிய வசதிகள் |
|---|---|
| திருகோணமலை | சாதாரண மேசை, கணணி மேசை, கணணி கதிரை, வாயு சீராக்கி |
| புத்தளம் | சாதாரண அலுவக மேசை, சாதாரண அலுவக கதிரை, இரும்பு அலுமாரி இலாச்சி, இரும்பு அலமாரி |
| அநுராதபுரம் | சாதாரண அலுவக மேசை, நிறைவேற்று அதிகாரிகளுக்கான கதிரை, இரும்பு அலுமாரி இலாச்சி, இரும்பு அலமாரி, தண்ணீர் பில்டர், பெடெஸ்டல் மின்விசிறி, வாயு சீராக்கி, கணணி |
| களுத்துறை | பெடெஸ்டல் மின்விசிறி, வாயு சீராக்கி,கணணி |
| மாத்தளை | பெடெஸ்டல் மின்விசிறி, தண்ணீர் பில்டர் |
| மாத்தறை | பெடெஸ்டல் மின்விசிறி, யூ.பீ.எஸ் |
| ஹம்பாந்தோட்டை | பெடெஸ்டல் மின்விசிறி |
| அம்பாறை | பெடெஸ்டல் மின்விசிறி, தண்ணீர் பில்டர் |
| குருணாகல் | லேசர் பிரிண்டர் |
| பொலநறுவை | தண்ணீர் பில்டர் |
| மட்டக்களப்பு | லேசர் பிரிண்டர் |
| யாழப்பாணம் | பெடெஸ்டல் மின்விசிறி, வாயு சீராக்கி, தண்ணீர் பில்டர் |
| காலி | தண்ணீர் பில்டர், கணணி, லேசர் பிரிண்டர |
| தலைமைக் காரியாலயம் | பெடெஸ்டல் மின்விசிறி, வாயு சீராக்கி, திரைச்சீலை, தண்ணீர் டிஸ்பெண்சர், கணணி, லேசர் பிரிண்டர், சாதாரண அலுவக மேசை, சாதாரண அலுவக கதிரை, இரும்பு அலுமாரி சிற்றுண்டிச்சாலை கதிரை,மேசை, கேட்போர் கூட கதிரை |

## 5.2 தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையம் மற்றும் அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவை திணைக்களத்தின் தலைமையக நிர்மாணப்பணிகள்.

சர்வதேச தரங்களுக்கமைவாக தேசிய அளவீட்டு தொகுதியினை நிறுவும் கடமையின் முதல் படியாக கருதப்படும் தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2013ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. புதிய வளாகம் கொழும்பிலிருந்து 27 கிலோமீற்றர் தொலைவில் ஹோமாகம பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### 5.2.1 தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையம்

| | |
|---|---|
| அமைவிடம் | மாஹேன்வத்த, பிட்டிபன, ஹோமாகம |
| ஆரம்பித்த திகதி | 2013.04.23 |
| வேலை நிறைவடையவுள்ள திகதி | 2014.10.23 |
| நிறைவுற்ற திகதி | 2015.10.02 |
| ஆய்வுகூடம் திறக்கப்பட்ட திகதி | 2015.12.08 |
| செயற்றிட்ட மொத்த செலவு | 1487.90 மில்லியன் ரூபா |
| நிதி மூலம் - 2015 | 200 மில்லியன் ரூபா (ஒன்றிணைந்த நிதியம்) |
| | 280 மில்லியன் ரூபா (திணைக்கள நிதியம்) |

தேசிய அளவீட்டுத் தொகுதியினை சர்வதேசத் தொகுதிக்கு ஏற்புடையதாக நிறுவுதல், தற்காலமயப்படுத்தல், அளவீட்டு நியமங்களை அறிமுகம் செய்தல், நிறுவுதல், வரையறை செய்தல், நாட்டினுள் சரியான அளவீட்டு முறைகளின் பயன்பாட்டினை உறுதிப்படுத்தல் போன்ற ஏராளமான தேசிய கட்டுப்பாடுகள் தேசிய அளவீட்டு ஆய்வு நிலையத்தின் பொறுப்பாகவுள்ளது. அன்றாடம் பயன்படுத்தப்படும் பல்வேறு பௌதீக பிரிவுகளின் அளவீடுகளுடன் தொடர்புடைய தேசிய தரங்களை வழங்கும் நிறுவனமும் இதுவாகும். கொள்ளளவு, நீளம், காலம், வெப்பநிலை, அழுத்தம், விட்டம், மின்னழுத்தம், வோல்ட் போன்ற பௌதீக அளவீடுகள் மட்டுமன்றி கனவளவு, அதிர்வு அளவீடு, ஒலி நிலை, சக்தி, கடினத்தனமை, பாகு நிலை, ஈரப்பதம், திரவ ஓட்ட அளவீடு, வெற்றிட அளவீடு வாடகை வாகன மானிகள் மற்றும் பாரிய நிறை அளவீடுகள் போன்ற பல்வேறு துறைகளுக்கு அளவீட்டு வசதிகள் வழங்கக் கூடிய வகையில் தேசிய அளவீட்டு பரிசோதனை நிலையம் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை கட்டளைகள் நிறுவனம், கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம், இலங்கை மின்சார சபை, துறைமுகங்கள் அதிகார சபை போன்ற அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் அளவீட்டு உபகரண சரிப்படுத்தல் நடவடிக்கைகளின் பொருட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பும் போது செலவாகும் அந்நியச் செலாவணியை

நாட்டிலேயே வைத்துக் கொள்வதற்கு இயலுமானமை இப்புதிய தேசிய அளவீட்டு விஞ்ஞான ஆய்வுகூடத்தினால் கிடைக்கப்பெறும் இலாபமாகும். மேலும் விஞ்ஞான ரீதியான அளவீட்டு விஞ்ஞானத்துறையின் ஆய்வு நடவடிக்கைகளை மிகவும் பரந்தளவில் மேற்கொள்ளவும் இதனூடாக வாய்ப்பு ஏற்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது

## 5.2.2 தற்போதைய கட்டிட நிர்மாணக் கட்டமைப்பு

ஆய்வுகூடத்தின் நிர்மாணப் பணிகள் 2015ம் ஆண்டின் பிற்பகுதியில் நிறைவடைந்தது.அதற்கமைய நிர்வாகக் கட்டடம், சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞானப் பிரிவு மற்றும் தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையம் என்ற மூன்று பிரதான கட்டடங்களை உள்ளடக்கியதாக நிர்மாணப்பணிகள் அவ்வாண்டின் இறுதியில் நிறைவுற்றது. மேலும் நிறுவனத்திற்கு அதிகவோல்ட் (வோல்ட் 33000) கொண்ட வழங்கல் தொகுதியொன்றுடன் கூடிய கிலோவோல்ட் அம்பியர் 1000 உடைய மின்பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று மற்றும் மின்மாற்றிகள் மூன்றினை கொண்ட இயந்திர அறையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேலும் தீ பாதுகாப்பு தொகுதியொன்று நிறுவப்பட்டு அதன்பொருட்டு விசேட நீர் வழங்கல் தொகுதியொன்றினைக் கொண்ட இயந்திர அறையொன்றும் வேறாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகக் கட்டடம் நான்கு மாடிகளைக் கொண்டுள்ளது. அதில் நீர்த்தாங்கித் தொகுதி, நிர்வாகப் பிரிவு, நிதிப் பிரிவு, கணக்காய்வுப் பிரிவு பணிப்பாளர் அறை, சிற்றுண்டிச் சாலை, வரவேற்பறை போன்ற பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கான மின்தூக்கி வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. நிர்வாகப் பிரிவின் இரண்டாவது கட்டமாக குறிப்பிடப்படும் ஏனைய கட்டடத்தில் சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானப் பிரிவு, பிரதான கேட்போர் கூடம், இயந்திர பட்டறை, பயிற்சிப் பிரிவு, சாரதிகள் பிரிவு மற்றும் ஏனைய அலுவலக அறைகள் உள்ளடக்கப்படவுள்ளன.அக்கட்டடம் மூன்று மாடிகளைக் கொண்டமையவுள்ளது.

தேசிய அளவீட்டு ஆய்வு நிலையமாக அமையவுள்ள ஏனைய கட்டடம் திணைக்களத்தின் மிகப்பெரிய கட்டடமாகும். இங்கு மின்தூக்கி வசதிகள் இடம்பெற்றுள்ளது. ஆய்வுகூடக் கட்டடம் பல்வேறு அளவீட்டுப் பிரிவுகளுக்கான வெவ்வேறான ஆய்வுகூடங்கள் மற்றும் நிர்வாகத் தொகுதி, அணுகல் கட்டுப்பாடு, தொலைபேசி மற்றும் இணைய தொடர்புகள் தொகுதி (Server Room) மற்றும் முன்புற வரவேற்பறை போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளது. அனைத்து பிரிவுகளுடனும் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் உள்ளகத் தொலைபேசி தொகுதியொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வாகனங்களை நிறுத்தி வைப்பதன் பொருட்டு பிறிதான வாகனத் தரிப்பிடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதோடு அதன் நிர்மாணப்பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. தற்போது வாகனங்ளை நிறுத்துவதற்காக கூரையுடன் கூடிய இரு தரிப்பிடங்களே காணப்படுகின்றது. திணைக்களத்தன் வெளிப்புறத் தரை கல் குற்றிகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் அனைத்து அறைகளுக்கும் வாயு சீராக்கிகளை பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படாத போதும் தற்போது அலுவலக அறைகள் மற்றும் ஆய்வுகூட நடவடிக்கைகள் இடம்பெறும் இடங்களில் மட்டும் போதுமான வாயு சீராக்கி வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அலுவலர்களுக்குத் தேவையானளவு வாயு சீராக்கிகள் தற்போது திணைக்களத்தில் காணப்படாமை ஒரு குறையாக நிலவுகின்றது. முக்கியமாக ஆய்வுகூடத்திற்கான மத்திய வாயு சீராக்கித் தொகுதி இதுவரை நிறுவப்படவில்லை. இதனை ஆய்வகூடத் தொகுதிக்கான விசேட திட்மொன்றாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய நிர்மாணப்பணிகளுக்கு மேலதிகமாக வாடகை வாகனங்களில் பயன்படுத்தப்படும் தூரம் மற்றும் கட்டணம் அளவிடப்படும் மானிகள் (Taxi Meters) மாதிரி அனுமதி மற்றும் உறுதிபடுத்தலின் பொருட்டு உரிய வசதிகளைக் கொண்ட வாடகை வாகன மானிகளின் பரிசோதனை நிலையம் ஒன்று மாஹேனவத்த வளாகத்தில் நிர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் நிர்மாணப்பணிகள் நிறைவுற்று அளவீட்டு உபகரணங்கள் ஸ்தாபிக்கபடவுள்ளன.

### 5.2.3 புதிய வளாகத்திற்குப் பிரவேசித்தல்

கொழும்பு 5 ல் அமைந்த பழைய அலுவலக வளாகத்தில் இருந்து புதிய அலுவலக வளாகத்திற்கு பொருட்களைக் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் 2015ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஆரம்பமானது. அலுவலக உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூடத்தின் அளவீட்டு உபகரணங்கள், நியமங்கள் போன்றவற்றை பிட்டிபன புதிய வளாகத்திற்கு கொண்டு செல்வதற்காக விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய அளவீட்டு ஆய்வு நிலையம் மற்றும் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் தலைமையகம் 2015 டிசம்பர் மாதம் 8ம் திகதி சுபவேளையில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை கௌரவ அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்கள் மற்றும் முன்னால் வர்த்தகத்துறை மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சரான தற்போதைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பந்துல குணவர்தண அவர்களின் பங்குபற்றுதலுடன் வைபவபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. அன்றைய தினம் இரவு பிரித் வைபவமும் அடுத்த நாள் மதகுருமார்களுக்கான அநுசரணை நிகழ்வும் இடம்பெற்ற



நிர்மாணிக்கப்படும் நிர்வாகக் கட்டடம்



ஆய்வுகூடத்தின் வெளிப்பகுதி நிர்மாணித்தல்



நிறை அளவீட்டு ஆய்வுகூடத்தின் உட்புறத் தோற்றம்



நிர்வாகக் கட்டடம்



தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தின் முன்புறம் வேலைகள் நிறைவடைந்த நிலையில்



நிர்வாகக் கட்டடம் கட்டம் 2- சட்டரீதியான அளவீட்டு விஞ்ஞானப் பிரிவு மற்றும் கேட்போர் கூடம




கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் கௌரவ ரிஷாட் பதியுதீன் அவர்களால் 2015 டிசம்பர் 08ம் திகதி சுபவேளையில் ஆய்வுகூடம் திறந்துவைக்கப்பட்ட போது




சுபவேளையில் பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டபோது




கௌரவ அமைச்சரால் வெப்ப அளவீட்டு ஆய்வு கூடம் பரிசீலிக்கபட்ட சந்தர்ப்பம்

## 5.3 எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள திட்டங்கள்

### 5.3.1 வாடகை வாகன மானிகள் (Taxi Meters) மாதிரி அனுமதி மற்றும் உறுதிப்படுத்தல் மத்திய நிலையம்

துல்லியத் தன்மை பரிசீலிக்கப்பட்ட வாடகை வாகன மானிகள் ஊடாக தூரம் மற்றும் காலத்தின்படி நம்பிக்கையான வாடகை வாகன சேவையினை மக்களுக்கு வழங்கும் நோக்குடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனூடாக வாடகை வாகன மானிகள் தொடர்பான சட்ட ரீதியான அளவீட்டு விஞ்ஞான விவரக்குறிப்புகள் கட்டுப்படுத்தப் படுகின்றன. வர்த்தகத்தின் போது பயன்படுத்தப்படும் ஏனைய அனைத்து அளவீட்டு உபகரணங்களைப் போன்று வாடகை வாகன மானிகளுக்கான சட்டரீதியான கட்டுப்பாடு மற்றும் மானியின் மாதிரி அனுமதி, அடிப்படை சரிபார்த்தல்,

மானி பொருத்தப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படும் வீதி பரிசோதனை மற்றும் வருடாந்த சரிபார்த்தல் எனும் நான்கு படிமுறைகள் இதன்போது பின்பற்றப்படும்.

வாடகை வாகனங்களில் பயன்படுத்தப்படும் தூரம் மற்றும் கட்டணம் அளவிடப் பயன்படும் மானி (Taxi Meters) மாதிரி அனுமதி மற்றும் உறுதிப்படுத்தலுக்குத் தேவையான வசதிகளைக் கொண்டுள்ள வாடகை வாகன மானி (Taxi Meters) பரிசீலிக்கும் மத்திய நிலையத்தின் நிர்மாணப்பணிகள் முடிவு செய்தல் மற்றும் அதன் அளவீட்டு உபகரணங்களை ஸ்தாபித்தல் மேற்கொள்ளப்படவுள்ளது. 2016ம் ஆண்டில் மாதிரி செயற்றிட்டமாக மானிகளின் மாதிரி அனுமதி(Pattern Approval of Taxi Meters) வழங்க ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி இலங்கையில் தற்போது வாடகை வாகன மானிகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் நிறுவனங்களுக்கு அம்மாதிரிகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள் அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் வழங்கக் கூடியதாக இருக்கும்

### 5.3.2 மத்திய வாயு சமநிலைத் தொகுதி

தேசிய அளவீட்டு ஆய்வு நிலையத்திற்காக மத்திய வாயு சீராக்கி தொகுதி (Central Air Condition System) ஒன்றினை நிறுவும்வேலைகள் போதிய நிதி ஒதுக்கீடு இன்மை காரணமாக இதுவரை ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. இவ்விசேட திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட தொகை 46,814,440 ரூபா ஆகும். இத்திட்டத்தின் நோக்கமாவது தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிலையத்தின் அனைத்து ஆய்வுகூடங்களையும் உள்ளடக்கிய வாயு சமநிலைத்தொகுதி ஒன்றினை உருவாக்குவதாகும். இதனூடாக ஆய்வு கூடத்தில் நிலவ வேண்டிய சரியான வெப்பநிலையினை பேண முடியும் என்பதோடு ஆய்வுகூடத்தின் வளிமண்டலத்தில் இருக்க வேண்டிய ஈரப்பதனை சரியாக கட்டுப்படுத்தவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய அளவீட்டு நியமங்களை பாதுகாக்கும் பொறுப்பினைக் கொண்ட நிறுவனம் என்ற வகையில் அத்தகைய நியமங்கள் நிறுவப்பட்டுள்ள ஆய்வுகூடத்தில் சர்வதேசத் தரங்களுக்கு அமைவாகக் காணப்பட வேண்டிய சுற்றாடல் காரணிகளை பேணுவதும் எமது கடமையாகும். ஒவ்வொரு நியமங்களும் நிறுவப்பட வேண்டிய உரிய வெப்பநிலை மற்றும் சுற்றாடல் ஈரப்பதன் மட்டமொன்று நிலவுகின்றது. தேசிய தரங்களுக்கமைவாக துல்லியத் தன்மைநிலைபெற வேண்டுமெனில் அத்தகைய சூழல் தகைமைகள் கட்டாயமாகக் காணப்பட வேண்டும். எனவே இந்த வாயு சமநிலைத் தொகுதியினை நிறுவுவதும் அத்தியாவசியமான காரணி ஆகும்.

## 6. தேசிய அளவீட்டு பரிசோதனை நிலையம்

### 6.1 அனைத்து ஆய்வுகூடங்களிலும் வழங்கும் அளவீட்டு இலக்க மாற்றம் பற்றிய விபரம்

(அட்டவணை 7)

| | **ஆய்வு கூடத்தின் பெயர்** | **வழங்கப்படும் அளவீட்டு மாற்ற சேவை** |
|---|---|---|
| 1 | வெப்ப அளவீட்டு ஆய்வுகூடம் | சிகிச்சைக்கான வெப்பமானிகள்<br>கைத்தொழில்சார் மற்றும் ஆய்வுகூட வெப்பமானி டிஜிட்டல் வெப்பமானிகள்<br>அனல்மின் வெப்பமானி மற்றும் எதிர்ப்பு வெப்பமானிகள்<br>கண்ணாடிகளுக்குள்ளாக திரவ வெப்பமானிகள்<br>Maximum Registered வெப்பமானிகள்<br>அதிகூடிய குறைந்த வெப்பநிலை அளவிடும் வெப்பமானிகள்<br>சுவர் வெப்பமானிகள்<br>மேற்பரப்பின் வெப்பநிலை அளவிடும் கருவிகள்<br>அகச்சிவப்பு வெப்பமானிகள்<br>ஈரப்பதன்மானிகள்<br>அகச்சிவப்பு ஈரப்பதன்மானிகள்<br>ஈரப்பதன் தராசுகள்<br>ஏற்றுக் கொள்ளப்பட்ட பிளட்டினம் எதிர்ப்புவெப்பமானிகள் (ஒப்பீட்டு முறை)<br>ஏற்றுக் கொள்ளப்பட்ட பிளட்டினம் எதிர்ப்புவெப்பமானிகள் (நிலையான புள்ளி முறை)<br>கைத்தொழில்சார் அனல்மின் வெப்பமானி (ஒப்பீட்டு முறை)<br>கைத்தொழில்சார் அனல்மின் வெப்பமானி (நிலையான புள்ளி முறை)<br>வெப்ப அளவீட்டு அனல் (திரவம் மற்றும் உலர்)<br>வெப்ப அளவீட்டு வரைவு<br>ஆய்வு கூட அடுப்புகள்<br>ஒடோக்ளச்<br>இன்கியுபேட்டர் மற்றும் நீர் அமிழ்த்தி வெப்பமாக்கி<br>அதிகுளிரூட்டி மற்றும் குளிரூட்டி (ஒற்றை அறை)<br>குளிருட்டி அறைகள் (அறை வெப்ப அளவீட்டுக் கருவி)<br>அனல் ஆளி / கட்டுப்பாட்டுக் கருவி<br>டிஜிட்டல் ஈரப்பதன் அறியும் கருவி<br>ஈரப்பதன் மற்றும் உலர் மின்குமிழ் ஈரப்பதன் மானி |

| | | |
|---|---|---|
| 2 | இலத்திரனியல் பலம் மற்றும் சக்தி தொடர்பான ஆய்வுகூடம் | கிலோ வொட் மணி மானி (ஒற்றை)<br>கிலோ வொட் மணி மானி (மூன்று கட்டம்)<br>கிலோ வொட் அம்பியர் மணி மானி (மூன்று கட்டம்)<br>நடைமுறை இலத்திரனியல் பலம்/சக்தி அளவிடும் உபகரணம் (ஒற்றை)<br>நடைமுறை இலத்திரனியல் பலம்/சக்தி அளவிடும் உபகரணம் (ஒற்றை)<br>மின்மானிகளை பரிசீலிக்கும் தொகுதி மீற்றர் (ஒற்றை)<br>மின்மானிகளை பரிசீலிக்கும் தொகுதி மீற்றர் (மூன்று கட்டம்)<br>இலத்திரனியல் சக்தி மீற்றர் (ஆய்வுகூட/ நிலையான/ ஒற்றை)<br>இலத்திரனியல் சக்தி மீற்றர் (ஆய்வுகூட/ நிலையான/ ஒற்றை/ நடைமுறை)<br>இலத்திரனியவ் சக்தி அளவிடும் உபகரணம் (ஆய்வுகூட/ நிலையான/ மூன்று கட்டம் / நடைமுறை) |
| 3 | கொள்ளளவு ஆய்வுகூடம் | பிரிவுகளற்ற அளவீடுகள்<br>கொள்ளளவு அளவீடுகள்<br>அளவீட்டு சிலிண்டர்கள்<br>வீதி தாங்கிகள்<br>மைக்ரோ பிபெட், பிபெட், பியுரெட், (3 லட்சங்களுக்கு) |
| 4 | அழுத்த அளவீட்டு ஆய்வுகூடம் | அழுத்த அளவைகள்<br>ஸ்பிக்மோமெமோமீற்றர்<br>டிஜிட்டல் குருதியமுக்க மானி |
| **5** | நிறை அளவீட்டு ஆய்வுகூடம் | அளவீட்டுப் படிகள்( OIML E 2 தரம்**)**<br>அளவீட்டுப் படிகள்( OIML E **1** தரம்**)**<br>OIML E **1** தரம் F2/M<br>தரம் / வெள்ளை இரும்பு கைத்தொழில் நிறுத்தல் படிகள்<br>ஏனைய கைத்தொழில் நிறுத்தல் படிகள்<br>திட்பத் தரம் I தராசுகள்<br>திட்பத் தரம்II தராசுகள்<br>திட்பத் தரம் III, IV தராசுகள்<br>பாலத் தராசுகள்<br>பொத்தன் இழுக்கும் இயந்திரம்<br>ஹோபர் தராசு |

| | | |
|---|---|---|
| 6 | நீள அளவீட்டு ஆய்வுகூடம் | மீட்டர் ரூல்/டேப்<br>அளவீட்டு குற்றிகள்<br>வர்னியர் கெலிப்பர்<br>மைக்ரோமீட்டர் அளவுகோல்கள்<br>விட்ட அளவுகோல்கள்<br>உயர அளவுகோல்கள்<br>கெலிப்பர் பரிசோதனை கருவி<br>பீலர் அளவுகோல்கள்<br>மொத்தத்தினை அளவிடும் அளவுகோல்கள் |
